அந்தரங்கமானது

NEW

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 42 - இந்து சமயம்

### புதிய பாடத்திட்டம்

### புள்ளியிடும் திட்டம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 42 - இந்து சமயம்

## புதிய பாடத்திட்டம்

## புள்ளி வழங்கும் திட்டம்

இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி ஒன்றின் மூன்று வினாக்களில் ஏதேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள 5 வினாக்களில் ஏதேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் பத்திரம் II இற்கு மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

- பத்திரம் I க்கு 50 x 2 = 100 புள்ளிகள்
- பத்திரம் II க்கு 5 x 20 = 100 புள்ளிகள்

| | | |
|---|---|---|
| இறுதிப்புள்ளி கணக்கிடல் | | |
| பத்திரம் I | - | 100 புள்ளிகள் |
| பத்திரம் II | - | 100 புள்ளிகள் |
| இறுதிப்புள்ளிகள் | - | 200 ÷ 2 = 100 |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................... ✓ △ 4/5
.....................................................................
.....................................................................

(ii) ..................................................................... ✓ △ 3/5
.....................................................................
.....................................................................

(iii) ..................................................................... ✓ △ 3/5
.....................................................................
.....................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

o o o

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

හින්දු ධර්මය I
இந்து சமயம் I
Hinduism I

42 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**1.** (1) திருவாதிரை (2) சிவராத்திரி (3) பிரதோஷம் (4) கேதாரகௌரி (5) கார்த்திகை

**2.** (1) இருத்தல் (2) கிடத்தல் (3) பரநிந்தை (4) ஆவிருதி (5) மேவல்

**3.** (1) சங்கரர் (2) மெய்கண்டார் (3) மத்துவர் (4) நீலகண்டர் (5) இராமானுஜர்

**4.** (1) மகிமா (2) கரிமா (3) தாரணை (4) ஈசத்துவம் (5) வசித்துவம்

**5.** (1) விஜயாலயன் (2) இராஜசிம்மன் (3) நந்திவர்மன் (4) பரமேசுவரவர்மன் (5) சிம்மவிஷ்ணு

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. **பொருந்தாத** அச்சோடிச் சொல்லைத் தெரிவுசெய்க.

**6.** (1) இயமம் - தீய செயல்களைத் தவிர்த்தல்
(2) நியமம் - ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்
(3) ஆசனம் - இருத்தல்
(4) பிராணாயாமம் - கூடுவிட்டுக் கூடுபாய்தல்
(5) பிரத்தியாகாரம் - புலனடக்கம்

**7.** (1) படைத்தல் - எழுத்தாணி பிடித்த கரம்
(2) காத்தல் - மோதகம் இருக்கும் கரம்
(3) அழித்தல் - அங்குசம் ஏந்திய கரம்
(4) அருளல் - அமுதகலசம்
(5) மறைத்தல் - பெரியசெவி

8. (1) திருச்சிராப்பள்ளி குகைக்கல்வெட்டு - இராஜசிம்மனின் சிவபக்தியைப் புலப்படுத்துவது
(2) பதவியாக் கல்வெட்டு - காளி கணத்தவர் அமைத்த காளிகோயில் பற்றிக் கூறுவது
(3) மிகிந்தலைக் கல்வெட்டு - ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம் பற்றிக் கூறுவது
(4) குடுமியான் மலைக்கல்வெட்டு - மகேந்திரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியைப் புலப்படுத்துவது
(5) மாமல்லபுரம் கணேசர் கோயிற்கல்வெட்டு - பரமேசுவரவர்மனின் சிவபக்தியைப் புலப்படுத்துவது

9. (1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் - யாழ்ப்பாணத்து சமயநிலை
(2) சுவாமி விபுலானந்தர் - கணேசதோத்திர பஞ்சகம்
(3) போசராச பண்டிதர் - செகராசசேகர மாலை
(4) சபாபதி சோதிடர் - சந்தானமணி
(5) அராலி இராமலிங்க முனிவர் - சந்தானதீபிகை

10. (1) சாங்கியம் - இருமைவாதம்
(2) யோகம் - ஈஸ்வர சாங்கியம்
(3) துவைதம் - பேதவாதம்
(4) சைவசித்தாந்தம் - சுத்தமாயா பரிணாமவாதம்
(5) அத்வைதம் - பேதாபேதவாதம்

● **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **அ, ஆ** என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. **அ** நிரலுக்கு ஏற்ற விதத்தில் **ஆ** நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

11.

| அ | ஆ |
|---|---|
| (i) உண்மை விளக்கம் | A - உமாபதிசிவாச்சாரியார் |
| (ii) கண்ணகி வழிபாடு | B - நந்தி இலட்சினை |
| (iii) ஆரியச் சக்கரவர்த்திகள் | C - சித்தானைக்குட்டி சுவாமிகள் |
| (iv) கோவிந்தசாமி | D - மனவாசகம் கடந்தார் |
| (v) உண்மைநெறி விளக்கம் | E - பத்தாசி |

(1) A E B C D (2) A E B D C (3) A E C B D (4) D E B C A (5) D E C B A

12.

| அ | ஆ |
|---|---|
| (i) காரைக்காலம்மையார் | A - மலையகம் |
| (ii) காமன்கூத்து | B - சங்கரர் |
| (iii) நல்வழி | C - சங்கமருவிய காலம் |
| (iv) வடபாங்கு தென்பாங்கு | D - மன்னார் |
| (v) பஜகோவிந்தம் | E - ஔவையார் |

(1) A E C D B (2) C A B D E (3) C A E D B (4) C D E A B (5) D E C A B

13.

| அ | ஆ |
|---|---|
| (i) சைவசித்தாந்தம் | A - முருகன் |
| (ii) இலிங்காயதர்கள் | B - மெய்கண்டசாத்திரம் |
| (iii) குறிஞ்சிநிலம் | C - திருக்கோணேச்சரம் |
| (iv) திருஞானசம்பந்தர் | D - வீரசைவர் |
| (v) தமிழாகமம் | E - திருமந்திரம் |

(1) A D E C B (2) B D A C E (3) B E A C D (4) B E C A D (5) C B D A E

14.

| அ | ஆ |
|---|---|
| (i) காமகலாவிலாசம் | A - தஞ்சாவூர் |
| (ii) திருவாவடுதுறை ஆதீனம் | B - இராமானுஜர் |
| (iii) சோழர் | C - மதுரை |
| (iv) பிரபக்தி | D - நமசிவாய மூர்த்திகள் |
| (v) நாயக்கர் | E - சாக்தாகமம் |

(1) B E D A C (2) D E B A C (3) E D A B C (4) E D A C B (5) E D C B A

| | அ | | ஆ |
|---|---|---|---|
| **15.** | (i) பொலன்னறுவை | A - | தணிகைப் புராணம் |
| | (ii) நம்பியாண்டார் நம்பி | B - | தேவதானம் |
| | (iii) சிவாலயம் | C - | திருவிடையாட்டம் |
| | (iv) வைணவ ஆலயம் | D - | திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை |
| | (v) கச்சியப்ப முனிவர் | E - | வானவன் மாதேவி ஈஸ்வரம் |

(1) B D E A C (2) C D B A E (3) E A B C D (4) E D B C A (5) E D C B A

● **16** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**16.** “சில ஆன்மாக்கள் நரகத்தையடைந்து என்றும் நரகவாசிகளாகவே இருக்கும்; அவற்றுக்கு விமோசனமே கிடையாது.” என்ற கொள்கையுடையவர்
(1) சங்கரர் (2) மத்துவர் (3) இராமானுஜர்
(4) நிம்பாக்கர் (5) வல்லபர்

**17.** “அன்பே கடவுள்; இவ்வுண்மையை உணர்ந்து வாழ்க்கை நடத்துதலே பக்தி யோகம்.” எனக் கூறும் நூல்
(1) பகவத்கீதை (2) யோகசூத்திரம் (3) சாங்கியகாரிகை
(4) பக்திசூத்திரம் (5) மாண்டுக்கிய காரிகை

**18.** மாண்டுக்கிய காரிகை என்ற நூலை எழுதியவர்
(1) மத்துவர் (2) வியாசர் (3) சங்கரர்
(4) கௌடபாதர் (5) யாக்ஞவல்கியர்

**19.** “தூய்மையான இறைவனை தூய பாடல்களால் போற்றுவோமாக” என்று குறிப்பிடும் இலக்கியம்
(1) இருக்கு வேதம் (2) யசுர் வேதம் (3) சாம வேதம்
(4) அதர்வண வேதம் (5) வாயுபுராணம்

**20.** “வேத மோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்” எனக் குறிப்பிடுவது
(1) சிவஞானபோதம் (2) திருமந்திரம் (3) சிவப்பிரகாசம்
(4) திருவருட்பயன் (5) உண்மை விளக்கம்

**21.** “ஓர் நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமோ” எனப் பாடியவர்
(1) திருஞானசம்பந்தர் (2) திருநாவுக்கரசர் (3) சுந்தரர்
(4) சேந்தனார் (5) மாணிக்கவாசகர்

**22.** ஈழத்துச் சித்தர்களுள் “நீர் ஒரு தெய்வீக மனிதர்” என அறிஞர் பிறௌணி என்பவரால் சிறப்பிக்கப்பட்டவர்
(1) சிவயோகசுவாமிகள் (2) கடையிற்சுவாமிகள் (3) செல்லப்பாசுவாமிகள்
(4) சித்தானைக்குட்டி சுவாமிகள் (5) குடையிற்சுவாமிகள்

**23.** ‘சிவானந்தநடனம்’ எனும் நூலினை இயற்றியவர்
(1) சுவாமி விபுலானந்தர் (2) ஞானப்பிரகாசர் (3) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
(4) காசிவாசி செந்திநாதையர் (5) ஆனந்தகுமாரசுவாமி

**24.** இசையில் மிகுந்த தேர்ச்சிப் பெற்றமையால் ‘வாத்யவித்யாதரன்’, ‘வீணாதரன்’ என்று அழைக்கப்படுபவன்
(1) நந்திவர்மன் (2) இராஜசிம்மன் (3) மகேந்திரவர்மன்
(4) மாமல்லன் (5) இராஜராஜசோழன்

**25.** ஆலயக் கொடிமரத்தில் உள்ள கொடிச்சீலை குறித்து நிற்பது
(1) பதி (2) பசு (3) சக்தி (4) ஆணவம் (5) மாயை

**26.** பின்வருவனவற்றுள் பெரியாழ்வார் இயற்றிய பிரபந்தங்களைக் குறிப்பது
(1) திருப்பல்லாண்டு, திருவிருத்தம்
(2) திருவாசிரியம், திருவாய்மொழி
(3) திருச்சந்தவிருத்தம், திருமொழி
(4) திருமாலை, திருப்பள்ளியெழுச்சி
(5) திருப்பல்லாண்டு, பெரியதிருமொழி

27. பின்வருவனவற்றுள் 'மகாபுராணங்கள்' என்னும் வகைக்குரியன மாத்திரம் உள்ளடங்கும் தொகுதி
(1) விஸ்ணுபுராணம், பாகவதபுராணம், பத்மபுராணம், ஸ்கந்தபுராணம்
(2) கருடபுராணம், நாரதபுராணம், விநாயகபுராணம், பெரியபுராணம்
(3) பத்மபுராணம், தட்ஷிணகைலாசபுராணம், கருடபுராணம், இலிங்கபுராணம்
(4) திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள்புராணம்
(5) மார்க்கண்டேயபுராணம், பிரமாண்டபுராணம், பெரியபுராணம், கந்தபுராணம்

28. 'தேசத்துக்கோயில்' என்று சிறப்பிக்கப்படுவது
(1) முன்னேஸ்வரம்
(2) நல்லூர் முருகன் கோயில்
(3) தாந்தாமலை முருகன் கோயில்
(4) கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரம்
(5) மாமாங்கப்பிள்ளையார் கோயில்

29. இந்து சமய மரபில் எஜமானுக்கும் பணியாளனுக்கும் இடையிலான உறவுமுறையாக அமைவது
(1) தாஸ்யம் (2) சகியம் (3) மதுரம்
(4) வாத்சல்யம் (5) சாந்தம்

30. இந்து சோதிட மரபில் நட்சத்திரங்களைக் கொண்டு கணிக்கப்படுவது
(1) கிழமை (2) திதி (3) கரணம்
(4) அயனங்கள் (5) யோகம்

● **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

31. நடராஜமூர்த்தம்
(1) சிவமூர்த்தங்களுள் ஒன்று
(2) சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளக்குவது
(3) மார்கழித் திருவாதிரையுடன் தொடர்புடையது
(4) ஆதியும் அந்தமும் இல்லா பரம்பொருள் தத்துவத்தை உணர்த்துவது
(5) ஆலயங்களில் ஆடல் வல்லானாகச் சிறப்பிக்கப்படுவது

32. பக்தி இயக்க காலம்
(1) தலபுராணங்கள் அதிகம் தோற்றம் பெற்றன.
(2) வேதாகம மரபுகள் பரவின.
(3) கலைகள் வளர்ச்சி பெற்றன.
(4) பிராமணக் குடியிருப்புகள் விரிவுபடுத்தப்பட்டன.
(5) சைவ, வைஷ்ணவ சமயங்கள் எழுச்சி பெற்றன.

33. விக்கிரகக் கலை
(1) சிற்பக் கலையுடன் நெருங்கிய தொடர்புடையது.
(2) சிற்ப சாஸ்திர விதிகளுக்கமைவாக அமைக்கப்படுவது.
(3) சோழர் காலப்பகுதியில் வெண்கலப் படிமங்கள் வார்க்கப்பட்டன.
(4) பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்றது.
(5) நிலையாக ஓரிடத்தில் நிறுவப்படுவது 'அசல விக்கிரகம்' என அழைக்கப்படும்.

34. சிந்துவெளிகால சமயநிலை
(1) தரைப்பெண் வழிபாடு நிலவியது.
(2) நிவேதன வழிபாட்டுக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.
(3) தொல்பொருட்கள் இந்து சமயச் சார்புடையன.
(4) இலிங்க வடிவங்கள் கண்டெடுக்கப்பட்டன.
(5) இந்திரன் முக்கிய தெய்வமாக வழிபடப்பட்டான்.

**35.** **சிவராத்திரி காலம்**
(1) சிவனின் விரதகாலம்
(2) கண்ணப்பர் பூசித்த காலம்
(3) இலிங்கோற்பவ காலம்
(4) அடிமுடி தேடிய காலம்
(5) ஆன்மாக்கள் அருள் பெறும் காலம்

- மேல்வரும் பகுதியில் **A** தொடக்கம் **J** வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>கதிரைமலைப்பள்ளு | B<br>நாதம் | C<br>சம்பந்தர் | D<br>பரிணாமவாதம் | E<br>புருடன் |
| F<br>சரீரசரீரி | G<br>பாலாவி | H<br>பிரகிருதி | I<br>பரராஜசேகரம் | J<br>விந்து |

**36.** ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தோடு தொடர்புடைய சேர்மானம்
(1) AI (2) AG (3) CI (4) GJ (5) EH

**37.** திருக்கேதீச்சரத்துடன் தொடர்புடைய சேர்மானம்
(1) AE (2) BJ (3) CG (4) CI (5) DG

**38.** சாங்கிய தத்துவத்துடன் தொடர்புடைய சேர்மானம்
(1) AF (2) DJ (3) EF (4) EH (5) FH

**39.** அருவத் திருமேனியோடு தொடர்புடைய சேர்மானம்
(1) AH (2) BE (3) BJ (4) CJ (5) HJ

**40.** விசிட்டாத்வைத தத்துவத்துடன் தொடர்புடைய சேர்மானம்
(1) AG (2) BJ (3) DF (4) EH (5) FJ

- **41** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்க.

**41.** **பிரமச்சரிய நிலையின் முக்கிய செயற்பாடு**
(1) கல்வியையும் ஒழுக்கத்தையும் கற்றல்
(2) குருவுக்குத் தட்சிணை வழங்குதல்
(3) தமக்குரிய வேலையைத் தாமே செய்தல்
(4) திருமணமாகும் வரை குருவின் ஆச்சிரமத்தில் தங்கியிருத்தல்
(5) பெற்றோர்களுக்குச் சேவை செய்தல்

**42.** **கர்மயோகம் என்பது**
(1) காமியம், நிஷ்காமியம் என இருவகையாக விளக்கமுறுவது
(2) செயல்மூலம் இறைவனுடன் இணைதல்
(3) பகவத்கீதையில் வலியுறுத்தப்பட்டுள்ளது
(4) ஸ்வதர்மத்தை வலியுறுத்துவது
(5) மூவகை யோகங்களுள் ஒன்று

**43.** **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சமூகப்பணிகளுள் பிரதானமானது**
(1) புராணபடனம் செய்தமை
(2) சமயப்பிரசங்கம் ஆற்றியமை
(3) கஞ்சித்தொட்டித் தருமம் மேற்கொண்டமை
(4) சமயநூல்கள் பலவற்றை எழுதியுள்ளமை
(5) சிவாகம வழிபாட்டு நெறியை வலியுறுத்தியமை

**44. நீதிநூல்களில் திருக்குறளின் முக்கியத்துவம்**
(1) திருவள்ளுவரால் எழுதப்பட்டது.
(2) முப்பால் என அழைக்கப்படுகிறது.
(3) பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.
(4) பல உரைகள் எழுந்துள்ளன.
(5) வாழ்வியல் அறங்களை பிரதானப்படுத்துவது.

**45. முன்னேஸ்வர தொன்மம்**
(1) புத்தளம் மாவட்டத்திலுள்ள சிலாபத்தில் அமைந்துள்ளது.
(2) இராமபிரான் வழிபட்ட தலம்.
(3) முன்னேஸ்வர மான்மியம் இதன் சிறப்பைக் கூறுகிறது.
(4) கீர்த்திஸ்ரீ ராஜசிங்கன் பணிபுரிந்தான்.
(5) மாயவன் ஆறு, இதன் தீர்த்தமாக உள்ளது.

**46. சைவத்தின் முடிந்த முடிபு**
(1) சுத்தாத்துவித முத்தி
(2) இருள் மலத்தை ஏற்றுக்கொள்வது
(3) முப்பொருள் உண்மை
(4) ஆன்மா சார்ந்ததன் வண்ணமானது
(5) பதிக்கு இருநிலைகள் உண்டு

**47. சித்தர்கள்**
(1) பக்தியை முதன்மைப்படுத்தியவர்கள்
(2) வாழ்வின் உறுதித் தன்மையை எடுத்துரைத்தவர்கள்
(3) சமயச் சடங்குகளுக்கு உட்பட்டவர்கள்
(4) சமயங் கடந்து சித்தம் ஒடுங்கி வாழ்பவர்கள்
(5) சித்து விளையாட்டுக்களைப் புரிபவர்கள்

**48. ஆண்டாள்**
(1) துளசிச் செடியின் கீழ் கண்டெடுக்கப்பட்டவர்.
(2) பெரியாழ்வாரின் அரவணைப்பில் வளர்ந்தவர்.
(3) விஷ்ணுவைக் காதலனாகக் கொண்டு நாச்சியார் திருமொழியைப் பாடியவர்.
(4) தென்னாட்டுப் பக்திநெறியில் சிறப்புப் பெறுபவர்.
(5) பெண்பக்தி நெறியாளர்களுள் ஒருவர்.

**49. சங்ககால வானியலும் கணிப்பும்**
(1) சங்க இலக்கியங்களில் வானியல், சோதிடம் பற்றிய கருத்துக்கள் உள்ளன.
(2) கோள்களின் இயக்கங்களைக் கணித்து நடக்கப் போவதைக் கூறும் கணியன்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.
(3) வானத்தில் இராசிதோறும் ஞாயிறு பெயர்ந்து செல்லல் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.
(4) சங்க இலக்கியங்களில் இடம்பெறும் திங்கள், பட்ஷம், நாள் என்ற பதங்கள் வானியலுடன் தொடர்புடையவை.
(5) சங்ககால மக்கள் கோள்கள், திரிந்துவரும் நாண்மீன்கள் பற்றி அறிந்திருந்தனர்.

**50 கடையிற்சுவாமிகள்**
(1) ஸ்ரீநரசிங்க பாரதியாரின் உத்தம சீடராகக் கருதப்பட்டவர்.
(2) பெங்களூர் நீதிமன்றில் நீதிபதியாகக் கடமையாற்றியவர்.
(3) 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பெங்களூரில் வாழ்ந்தவர்.
(4) இரும்பைப் பொன்னாக்கிக் கொடுத்தவர்.
(5) யாழ்ப்பாணம் பெரியகடை வீதியை தனது வாழ்விடமாகக் கொண்டவர்.

❋❋❋

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

| විෂය අංකය பாட இலக்கம் | 42 | විෂයය பாடம் | இந்து சமயம் |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 4 | 21. | 5 | 31. | 4 | 41. | 1 |
| 02. | 4 | 12. | 3 | 22. | 1 | 32. | 1 | 42. | 2 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 5 | 33. | 4 | 43. | 3 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 2 | 34. | 5 | 44. | 5 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 2 | 35. | 2 | 45. | 2 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 5 | 36. | 1 | 46. | 3 |
| 07. | 5 | 17. | 1 | 27. | 1 | 37. | 3 | 47. | 4 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 4 | 38. | 4 | 48. | 3 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 1 | 39. | 3 | 49. | 2 |
| 10. | 5 | 20. | 2 | 30. | 5 | 40. | 3 | 50. | 5 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

හින්දු ධර්මය II
இந்து சமயம் II
Hinduism II

42 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி **I** இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி **II** இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (அ) உபநிடதம் என்பதன் பொருளைத் தருக. (2 புள்ளிகள்)

(ஆ) உபநிடதங்கள் தோன்றிய பின்னணியைச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (4 புள்ளிகள்)

(இ) பிரபஞ்சம் குறித்த உபநிடதங்களின் கருத்துக்களை விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) உபநிடதங்கள் கூறும் பிரம்மம் பற்றிய கருத்துக்களை விளக்குக. (8 புள்ளிகள்)

**2.** (அ) கிராமிய வழிபாட்டின் சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ஆ) கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் ஆண் தெய்வங்கள் நான்கின் பெயர்களைத் தருக. (4 புள்ளிகள்)

(இ) இலங்கையில் கண்ணகி வழிபாட்டின் தோற்றம் பற்றி விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) கண்ணகி வழிபாட்டுச் சடங்கில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளை விளக்குக. (8 புள்ளிகள்)

**3.** (அ) பல்லவர் கால கலை வளர்ச்சிக்குப் பங்காற்றிய பல்லவ மன்னர்கள் இருவரைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ஆ) பல்லவர் காலத்தில் இசைக்கலை வளர்ச்சி அடைந்தமையைக் காட்டும் சான்றுகள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(இ) பல்லவர் காலக் கோயிற் கட்டடக்கலையின் வகைகளை உதாரணங்களுடன் விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) பல்லவர் காலச் சிற்பக்கலை பற்றி சுருக்கமாக விளக்குக. (8 புள்ளிகள்)

## பகுதி II

**4.** ஆதிசங்கரரின் அத்வைதக் கொள்கையினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.
(அ) அத்வைதம் - பொருள் விளக்கம்
(ஆ) பிரம்மம்
(இ) ஆன்மா
(ஈ) உலகம் (5 × 4 = 20 புள்ளிகள்)

**5.** சைவசித்தாந்தத்தில் 'பதி' பெறும் முக்கியத்துவத்தை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.
(அ) பதியின் இருப்பு
(ஆ) பதியின் இயல்புகள்
(இ) இறைவனும் ஆன்மாவும்
(ஈ) ஆன்மவிடுதலையும் இறையருளும் (5 × 4 = 20 புள்ளிகள்)

**6.** இந்துக்களின் வாழ்வினை விரதங்கள் வளம்படுத்துமாற்றை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.
(அ) விரதம் என்பதன் பொருள்
(ஆ) விரத நியமங்கள்
(இ) கந்தசஷ்டி விரதம்
(ஈ) விரதத்தின் பலாபலன்கள் (5 × 4 = 20 புள்ளிகள்)

**7.** இந்து சமய வரலாற்றில் மேல்வரும் சித்தர்கள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.
(அ) திருமூலர்
(ஆ) சிவயோகசுவாமிகள் (10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** இந்து அறிவியல் மரபில் மேல்வருவனவற்றின் வகிபங்கினை விளக்குக.
(அ) பஞ்சாங்கம்
(ஆ) வேதங்களில் மருத்துவம் (10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

# பகுதி I

1. அ) உபநிடதம் என்பதன் பொருளைத் தருக. (02 புள்ளிகள்)

ஆ) உபநிடதங்கள் தோன்றிய பின்னணியைச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (04 புள்ளிகள்)

இ) பிரபஞ்சம் குறித்த உபநிடதங்களின் கருத்துக்களை விவரிக்குக. (06 புள்ளிகள்)

ஈ) உபநிடதங்கள் கூறும் பிரம்மம் பற்றிய கருத்துக்களை விளக்குக. (08 புள்ளிகள்)

**அ) உபநிடதம் என்பதன் பொருளைத் தருக.**

- அருகில்(உப), ஈடுபாட்டுடன்(நி), உட்கார்ந்திருத்தல்(சத்) என்பதே உபநிடதம் என்பதன் பொருளாகும். அதாவது, மறைபொருள் கோட்பாடுகளை அறிவுறுத்தும் ஞானாசிரியனுக்கு அருகில் இருந்து மாணவன் சிரத்தையுடன் கற்றலை உபநிடதம் என்ற சொல் குறிக்கிறது.

(02 புள்ளிகள்)

**ஆ) உபநிடதங்கள் தோன்றிய பின்னணியைச் சுருக்கமாக அறிமுகம் செய்க.**

- உபநிடதங்கள் உலகத்தைப் பற்றிய விசாரத்தின் பயனாக எழுந்தவை. மன்னுயிர்கள் வாழும் சுற்றாடல், பிரபஞ்சம், இவற்றின் தோற்றம், நிலைபேறு ஆதாரம் என்பவை பற்றிய உணர்வுகளின் காரணமாக எழுந்தவை.

- கிரியைகளுக்கு எதிர்நிலையாக எழுந்தவை. கிரியைகள் மூலமாக வாழ்வில் முழுமைபெற முடியாத நிலையில் ஏற்பட்ட ஆன்மீகத் தேடல்.

- பிராமணங்கள் வேள்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கிய நிலையில் உபநிடதங்கள் எளிய வழிபாட்டு முறையை அறிமுகம் செய்தன. உ-ம்: தவம், தீர்த்தம்

- சாதாரண மக்களும் சமய, தத்துவக் கருத்துக்களை அறிந்துகொள்ள வேண்டும் எனும் நோக்கில் எழுந்தவை.

- உரையாடல், வினா- விடை, விவாதம் ,செய்முறை விளக்கம் முதலான வழிமுறைகளின் மூலம் உபநிடத சிந்தனைகள் வளர்ச்சி பெற்றன.

(04 புள்ளிகள்)

**இ) பிரபஞ்சம் குறித்த உபநிடதங்களின் கருத்துக்களை விவரிக்குக.**

- உலகத்தினுடைய தோற்றத்திற்கும் அதன் இயக்கத்திற்கும் காரணமாக உபநிடதங்கள் பிரம்மத்தையே குறிப்பிடுகின்றன.

- முண்டகோபநிடதம் - "எப்படி சிலந்திப் பூச்சியானது தன்னிடத்திருந்தே நூலைப் படைத்து ஒடுக்கிக் கொள்கிறதோ, எப்படி நிலத்தில் மரங்கள் தோன்றுகின்றனவோ, எப்படி உயிருள்ள மனிதனிடத்தில் உரோமங்கள் உண்டாகின்றனவோ, அப்படி அழிவற்ற பரம்பொருளிடமிருந்து இந்தப் பிரபஞ்சம் உண்டாகிறது"

- தைத்திரியோபநிடதம் - "நான் என்னைப் பிறப்பிக்கட்டுமா என்று அவர் விரும்பினார். அவர் தவத்தினை மேற்கொண்டார். தவம் செய்தபின் அவர் இவையனைத்தையும் படைத்தார். இங்குள்ள அனைத்தையும் படைத்த பின் உண்மையிலேயே படைத்த அவற்றுள் புகுந்தார்" .

- பிருகதாரண்யகம் - "நெருப்பிலிருந்து சிறு சிறு தீப்பொறிகள் வெளிவருவதைப் போல், இந்த ஆன்மாவிலிருந்து (பிரம்மத்திலிருந்து) எல்லா உயிர்களும், எல்லா உலகங்களும் எல்லாத் தேவர்களும், எல்லா ஜீவன்களும் தோன்றுகின்றன."

- சாந்தோக்கியம் - "நான் பலவாதல் வேண்டும் எனின் என்னைப் பிறப்பித்துக் கொள்வேன் ஆக என்று அது நினைத்தது".

**(06 புள்ளிகள்)**

**ஈ) உபநிடதங்கள் கூறும் பிரம்மம் பற்றிய கருத்துக்களை விளக்குக.**

- உபநிடதங்கள் கூறும் கடவுள் பிரம்மம். பிரம்மம் என்ற சொல் பிரஹ் என்ற வினையடியாகப் பிறந்தது. இதன் பொருள் தோன்றுதல் அல்லது வளர்தல். இவ்வுலகத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக இருப்பது பிரம்மம்.

- இப்பிரம்மத்தைச் சொற்களால் விபரிக்கமுடியாது. அவ்வாறு விபரிக்க முற்படுவது ஒருவன் தானே தனது தோழில் ஏறி நிற்க முயல்வதைப் போன்றது என்றும், வண்டியானது தன் சக்கரத்தைத் தானே உருட்டிப்பார்க்க முயல்வதைப் போன்றது எனவும் விளக்கப்படுகிறது.

- பிரம்ம தத்துவத்தின் இரகசியத்தை, சுவேதகேதுவிற்கும் உத்தாலகருக்கும் இடையிலான உரையாடலின் மூலமாக சாந்தோக்கிய உபநிடதம் தெளிவுறுத்துகிறது.

- உபநிடதங்கள் பிரம்மத்திற்கு இரு நிலைகளைக் குறிப்பிடுகின்றன. ஒன்று, பிரபஞ்சத்துடன் கூடியநிலை (சப்பிரபஞ்ச நிலை). மற்றயது, பிரபஞ்சத்தைக் கடந்த நிலை (நிஷ் பிரபஞ்ச நிலை). சாந்தோக்கிய உபநிடதத்தின் சாண்டில்ய வித்யா பகுதியில் இவ்விரு நிலைகளும் விளக்கப்பட்டுள்ளன.

- பிரம்மத்தின் உயர்ந்த நிலையை உபநிடத மகாவாக்கியங்களான தத்துவமசி, அகப்பிரமாஸ்மி, சோகம் அஸ்மி முதலானவற்றின் மூலம் விளக்கப்படுகின்றமை.

- பிருகதாரண்ய உபநிடதம் பிரமத்தை பூரணப் பொருளாக குறிப்பிடுகின்றது. "பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தாலும் எஞ்சியிருப்பது பூரணமே".

- சுவேதாஸ்வரம் – "எள்ளில் எண்ணெய் போலவும், தயிரில் நெய் போலவும், ஊற்றுக்களில் நீர் போலவும், விறகில் தீ போலவும் இந்தப் பரமாத்மா ஜீவாத்மாவிடம் உள்ளது"

- கடோபநிடதம் - "உலகத்திலுள்ள அனைத்துப் பொருட்களின் ஒருமித்த இயக்கத்தை எந்தச் சக்தி ஆட்டுவிக்கின்றதோ அந்தச் சக்தியே பிரம்மம்"

**(08 புள்ளிகள்)**

**2. அ) கிராமிய வழிபாட்டின் சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)**

**ஆ) கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் ஆண்தெய்வங்கள் நான்கின் பெயர்களைத் தருக. (04 புள்ளிகள்)**

**இ) இலங்கையில் கண்ணகி வழிபாட்டின் தோற்றம் பற்றி விவரிக்குக. (06 புள்ளிகள்)**

**ஈ) கண்ணகி வழிபாட்டுச் சடங்கில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளை விளக்குக. (08 புள்ளிகள்)**

**அ) கிராமிய வழிபாட்டின் சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

- இனக்குழுமம் ஒன்றினது பண்பாடுகளை வெளிப்படுத்தும்.
- சமுதாய வழமைகளை எடுத்துக் கூறும்.
- இறைவனுக்கும் வழிபடுபவனுக்குமான தொடர்பு நேரடியானது.

**(02புள்ளிகள்)**

**ஆ) கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் ஆண்தெய்வங்கள் நான்கின் பெயர்களைத் தருக.**

ஐயனார், சுடலைமாடன், மதுரைவீரன், காத்தவராயன், அண்ணமார், குமாரத்தன், நீலாசோதையன், கருப்பண்ணசாமி, முனியாண்டி, பெரியதம்பிரான், நாகதம்பிரான்,

**(04 புள்ளிகள்)**

**இ) இலங்கையில் கண்ணகி வழிபாட்டின் தோற்றம் பற்றி விவரிக்குக.**

- 2 ஆம் கஜபாகு மன்னனால் ஆரம்பிக்கப்பட்டது. (கி.பி 2 ஆம் நூற்றாண்டு)
- அங்கணாமைக்கடவை எனும் இடத்தில் முதலாவது கோயில் கண்ணகிக்கு கட்டப்பட்டது.
- கஜபாகு மன்னன் ஆடிமாதந்தோறும் அனுராதபுரத்தில் விழா எடுக்கும் வழக்கத்தினை மேற்கொண்டான்.
- சிங்களவர்கள் பத்தினி தெய்யோ என அழைத்து கண்ணகியை வழிபட்டனர்.
- அளவெட்டி, சுருவில், கோப்பாய், நயினாதீவு, செட்டிபாளையம், வற்றாப்பளை, பூநகரி முதலான இடங்களில் கண்ணகிக்கு கோயில்களுண்டு.

**(06 புள்ளிகள்)**

**ஈ) கண்ணகி வழிபாட்டுச் சடங்கில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளை விளக்குக.**

- பிரதேச ரீதியாக சிறுசிறு வேறுபாடுகளுடன் சடங்குகள் இடம்பெறுகின்றன.
- வைகாசித் திங்களில் வருவேன் என்று கண்ணகி கூறியபடி வைகாசிப் பூரணையைக் குளிர்த்தி நாளாகக் கொண்டு மூன்று, ஐந்து, ஏழு நாட்கள் சடங்குகள் இடம்பெறும்.
- முதல் நாள் சடங்காக ஊர்காவல் செய்தல், மடைவைத்தல். கற்பூரதீபம் ஏற்றி கதவைத்திறத்தல்.
- ஆலய மண்டபத்தில் நெற்குவியலில் கமுகம்பாளை, வேப்பிலை முதலான அலங்காரத்துடன் பூரண கும்பம் வைக்கப்படும்.
- கலியாணக்கால் வெட்டுதல், விநாயக பானை.
- கதவு திறந்தபின் தினமும் ஏடு படித்தல்.

**(08 புள்ளிகள்)**

3. அ) பல்லவர் கால கலை வளர்ச்சிக்குப் பங்காற்றிய பல்லவ மன்னர்கள் இருவரைப் பெயரிடுக.
(02 புள்ளிகள்)

ஆ) பல்லவர் காலத்தில் இசைக்கலை வளர்ச்சி அடைந்தமையைக் காட்டும் சான்றுகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

இ) பல்லவர் காலக் கோயிற்கட்டடக்கலையின் வகைகளை உதாரணங்களுடன் விவரிக்குக.
(06 புள்ளிகள்)

ஈ) பல்லவர் கால சிற்பக்கலை பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

**அ) பல்லவர் கால கலை வளர்ச்சிக்குப் பங்காற்றிய பல்லவ மன்னர்கள் இருவரைப் பெயரிடுக.**

- மகேந்திரவர்மன், மாமல்லபல்லவன் ( 2 ஆம் நரசிம்ம வர்மன்), இராஜசிம்மன், பரமேஸ்வரவர்மன், நந்திவர்மன்

(02 புள்ளிகள்)

**ஆ) பல்லவர் காலத்தில் இசைக்கலை வளர்ச்சியடைந்தமையைக் காட்டும் சான்றுகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- மன்னர்களின் கலை ஆதரவும் – ஆளுமையும்.
- பல்லாவரம் குகைக்கோயில் கல்வெட்டு – மகேந்திர வர்மன் தன்னை சங்கீர்ணஜாதி என்று குறிப்பிட்டமை.
- இராஜசிம்மன் பெற்ற விருதுப்பெயர்கள். வாத்திய வித்தியாதரன், வீணாநாரதன்.
- மகேந்திரவர்மன் பரிவாதினி என்னும் வீணை மீட்டுவதில் வல்லவன்.
- நாயன்மார்களும் ஆழ்வார்களும் இசைக்கலைக்கு வளம் சேர்த்தமை.
  "ஓசை ஒலியெலாம் ஆனாய்"
  " பண்ணும் பதமேழும்"
- திருக்கோயில்கள் இசைக்கலையை வளமூட்டின.
- ஆலயக்கிரியைகளில் இசைக்கலையின் முக்கியத்துவம்..
  " காலையொடு துந்துபிகள் சங்கு குழல் யாழ்முழவு"

(04 புள்ளிகள்)

**இ) பல்லவர் காலக் கோயிற்கட்டடக்கலையின் வகைகளை உதாரணங்களுடன் விவரிக்குக.**

- உறுதியான பொருட்களைக் கொண்டு கட்டடங்கள் ஆக்கியமை. மண்டகப்பட்டு கல்வெட்டு வாசகம்.

- கோயிற்கட்டடக்கலை வகைகள்.

1. குடைவரை (குடபோகம், குடைதளிகள்) – சிறிய மலைகளைக் குடைந்து எடுப்பிக்கப்பட்டவை – மாமண்டூர், பல்லாவரம், திருச்சி, சீயமங்கலம், தளவானூர்.

2. மலைதளிகள் (ஒற்றைக்கற்கோயில்கள், ரதக்கோயில்கள்) - சிறிய குன்றுகளை மேலிருந்து கீழாகச் செதுக்கி அமைக்கப்பட்டவை.
   மாமல்லன் பாணிக்குரியவை - பஞ்சபாண்டவர்ரதம், கணேசரதம், வலையான்குட்டைரதம், பிடாரி ரதங்கள்.
   இராஜசிம்மன் பாணிக்குரியவை.

3. கட்டுத்தளிகள் (கற்றளிக் கோயில்கள்) – கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்பட்டவை.
   ராஜசிம்மன் பாணி உதாரணம் – காஞ்சி கைலாசநாதர் கோயில், மாமல்லபுரம் (ஜலசயனம்), பனைமலை, காஞ்சிபுரம்.
   நந்திவர்மன் பாணி, உதாரணம் – முத்தீஸ்வரர் கோயில், மதங்கேஸ்வரர் கோயில், வாடாமல்லீஸ்வரர் கோயில், ஐராவதேஸ்வரர் கோயில், வீரட்டானேஸ்வரர் கோயில்.

**(06 புள்ளிகள்)**

**ஈ) பல்லவர் காலச் சிற்பக்கலை பற்றி விளக்குக.**

- குடைவரைக் கோயில் சிற்பங்கள் – மண்டபச்சிற்பங்கள் – மகிடாசுர மண்டபம்., வராக மண்டபம்.

- ஒற்றைக்கற்கோயில் சிற்பங்கள் – பஞ்சபாண்டவர் ரதச்சிற்பங்கள், தர்மராஜரதம், சிற்பங்களஞ்சியம்.

- கட்டுத்தளிச்சிற்பங்கள் - காஞ்சி கைலாசநாதர், திருக்காமக் கோட்டச்சிற்பங்கள், முத்தீஸ்வரர், மதங்கேஸ்வரர், ஐராவதேஸ்வரர்,வைகுந்தப்பெருமாள் கோயில் - பல்லவர் அரச வரலாறு சித்தரிக்கப்பட்டிருத்தல்.

- திறந்தவெளிப்பாறைச் சிற்பங்கள் – மாமல்லபுரம். மூவுலக் காட்சி சித்திரிப்புகள்.
  கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல்.
  ஆகாய கங்கை தரையிறக்கம்.
  அர்ச்சுனன் தவம் / பகீரதன் தவம்..

**(08 புள்ளிகள்)**

**4. ஆதிசங்கரரின் அத்வைதக் கொள்கையினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.**

**அ) அத்வைதம் - பொருள் விளக்கம்**

**ஆ. பிரம்மம்**

**இ. ஆன்மா**

**ஈ. உலகம்**

**(05 x 4 = 20 புள்ளிகள்)**

**அ) அத்வைதம் - பொருள் விளக்கம்**

- அத்வைதம் என்பதை அ – துவைதம் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். துவைதம் என்றால் இரண்டு, அ என்றால் அல்ல. எனவே, அத்வைதம் என்பது இரண்டற்றது எனப் பொருள்படும்.
- சங்கரர் உண்மைப்பொருள் ஒன்றே அது இரண்டல்ல என்பதைக் குறிக்க அத்வைதம் என்ற தொடரைப் பயன்படுத்துகின்றார். இதன்படி பிரம்மம் மட்டுமே உண்மைப்பொருள். ஏனையவை தோற்றம் என்பது அவரது கருத்தாகும்.
- அத்வைத தத்துவத்தின் மூலம் அவர் கூற விளைகின்ற கருத்தினை மிகச் சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடலாம். "பிரம்மம் இரண்டற்ற மூலப் பொருள், பலவாகக் காணப்படும் உலகம் பொய்த்தோற்றம், ஜீவன் பிரம்மத்தை விட வேறன்று."

**(05 புள்ளிகள்)**

**ஆ. பிரம்மம்**

- மாறிவரும் இந்த உலகத்தில் மாறாதது எதுவோ, நிலையற்ற இந்த உலகத்தில் நிலையானது எதுவோ, அழியத்தக்க இந்த உலகத்தில் அழியாதது எதுவோ, இயங்காத இந்த உலகத்தை இயக்குவிப்பது எதுவோ அந்தப் பேராற்றலே பிரம்மம்.
- பிரம்மத்தின் இயல்பு – அது ஒன்றானது, குணங்களற்றது, விவரிக்க முடியாதது, எல்லையற்றது, எங்கும் வியாபகமானது, எல்லாவற்றுக்கும் அடிப்படையானது, புலன்களுக்கு அப்பாற்பட்டது, நிர்மலமானது, பரிபூரணமானது, பற்றற்றது, பேரின்பமானது, காலங்களைக் கடந்து நிற்பது, மாசற்றது, எதனாலும் அளக்கமுடியாதது, ஆழம் காண முடியாதது, அதற்குப் பிறப்பில்லை, இறப்பில்லை ஆரம்பம் இல்லை, முடிவும் இல்லை.
- அத்வைத மரபில் பிரம்மத்துக்கு இரு நிலைகள் பேசப்படுகின்றன. ஒன்று மாயையோடு சேராத நிலை. மற்றது மாயையோடு சேர்ந்த நிலை. மாயையோடு சேர்ந்த பிரம்மத்திற்கு ஈஸ்வரன் என்று பெயர். மாயையோடு சேராத நிலையே உயர்ந்தது. அதுவே குணங்கள் யாவும் கடந்த நிலை. அதனை நிர்க்குணப் பிரம்மம் என்கிறார்.

- சங்கரரைப் பொறுத்தவரை உலகு, ஆத்மன், ஈஸ்வரன் ஆகிய அனைத்தும் பிரம்மத்தின் வெவ்வேறுபட்ட தோற்றங்களாகும். இவையனைத்தும் முடிவான உண்மைப் பொருட்களல்ல. பிரம்மமே முடிவான உண்மைப் பொருளாகும்.

- "பிரமம் சத்யம் ஜகத் மித்யா"

**(05 புள்ளிகள்)**

**இ. ஆன்மா**

- ஒரேயொரு மூலப்பொருளாயுள்ள பிரம்மமே பல சீவன்கள் ஆகிறது. அந்த ஒன்றே உண்மைப் பொருள். அதனை பரமாத்மா என அத்வைதம் குறிப்பிடுகின்றது.

- இங்ஙனம் அடிப்படையில் ஒரு ஆன்மாவே உண்மை (பரமாத்மா) என வாதிப்பதனாலேயே சங்கரருடைய அத்வைதம் ஏகான்மவாதம் எனவும் அழைக்கப்படுகிறது.

- பிரம்மமானது பருவுடம்புடன் தன்னை இனங்காணுகின்ற போது ஜீவன் என அழைக்கப்படுகின்றது. உண்மையில் ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்குமிடையில் வேறுபாடில்லை என்பர். பரமாத்மனானது தூய, உயர்வான ஆன்மாவாக அமைய அவித்தையின் (மாயை) செல்வாக்கினால் ஜீவாத்மன் இருப்புக்குரியதாகின்றது.

- அறியாமையின் காரணமாகவே ஒன்றாம் தன்மையிலிருந்து ஜீவனின் பன்மைத் தன்மையானது அமைவுறுகின்றது. சங்கரர் பரமாத்மாவிற்கும் பன்மைத் தன்மை கொண்ட ஜீவாத்மனுக்குமிடையில் அமையும் தொடர்பினைப் பிரதிவிம்ப வாதம், அவச்சேத வாதம் என்பவற்றின் மூலம் விளக்குகிறார்.

- ஆன்ம விடுதலைக்கான முக்கிய வழி – ஞானம்

**(05 புள்ளிகள்)**

**ஈ. உலகம்**

- மாயை காரணமாக பிரம்மம் உலகாகத் தோன்றுகிறது. விவர்த்தவாதக் கொள்கை மூலம் இதனை நிரூபிக்கின்றார்.
  உ-ம்: கயிறு – பாம்பாதல்
  இங்கு காரணம் மட்டும் உண்மை. காரியம் பொய். இதுபோன்றதே பிரம்மம் –
  உலகாதல்.

- என்றும் உள்ள பொருள் பிரம்மம். இது – சத் எனப்படும். ஒரு பொழுதும் இல்லாத பொருள் ஆகாயத்தாமரை / முயற்கொம்பு. இது அசத் எனப்படும். இவை இரண்டுக்கும் இடைப்பட்டதே உலகம். இதனால் உலகம் – சதசத் இலட்ஷணம் எனப்படுகிறது.

- கௌடபாதரின் கனவுலகம், நனவுலகம், கடந்தநிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சங்கரரும் இவற்றை முறையே பிராதிபாஷிகம், வியாவகாரிகம், பரமார்த்திகம் என்பவற்றின் அடிப்படையில் விளக்குகிறார். அதாவது ஒவ்வொரு நிலையைக் கடந்து வரும்போதும் முன்னைய நிலை பொய்யாகிறது. எனவே உலகம் பொய்யாகிறது.

**(05 புள்ளிகள்)**

**5. சைவசித்தாந்தத்தில் பதி பெறும் முக்கியத்துவத்தை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.**

**அ) பதியின் இருப்பு**

**ஆ) பதியின் இயல்புகள்**

**இ) இறைவனும் ஆன்மாவும்**

**ஈ) ஆன்மவிடுதலையும் இறையருளும்**

**(05 X 4 = 20 புள்ளிகள்)**

**அ) பதியின் இருப்பு**

- சைவசித்தாந்தம் பதியின் இருப்பினை பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் எனும் மூவகைப் பிரமாணங்கள் மூலம் நிறுவுகின்றது.

- உலகின் படைப்பினைக் கொண்டு பதியின் இருப்பினை நிறுவுதல்.
  உதாரணம் - பானை - குயவன்
  "தேரின் மண் மாயையாகத் திரிகை தன் சக்தியாக..."

- வினைப்பயன்களைச் சேர்க்க ஒரு தலைவன் அவசியம். தனு, கரண, புவன, போகங்களை உயிர்களுக்கு ஊட்டுபவன்.
  "செய்வானும் செய்வினையும் சேர்பயனும்..."

- முதற்காரணம் - மாயை
  துணைக்காரணம் - திருவருட்சக்தி
  நிமித்த காரணம் - இறைவன்

- இறைவனின் இருப்பினை சிவஞானபோதம்,
  "அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்..."
  என சிவானுபூதி பெற்ற அனுபூதிமான்களின் கூற்றுக்களால் நிறுவுதல்.

**(05 புள்ளிகள்)**

**ஆ) பதியின் இயல்புகள்**

- சத், சித், ஆனந்தமுடைய பொருள்
- பதிக்கு இரு நிலைகளுண்டு.
- சொரூபநிலை - கருவி கரணங்களுக்கு அப்பாற்பட்டு விளங்கும் நிலை.
  "நிலவும் அருவுருவமின்றிக் குணம் குறிகளின்றி நின்மலனாய் நித்தமாகி ஏகமாக..."
  "சிவனருவுமல்லன் உருவுமல்லன் சித்தினோடு அசித்துமல்லன்..."
  "...இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே.."
- எண்வகைக் குணங்கள்
- தடத்தநிலை - கருவி கரணங்களால் அறியக்கூடிய அனுபவிக்கக்கூடிய நிலை.
- ஆன்மாக்களின் மீது கொண்ட கருணையினால் அவற்றின் அறியாமையை நீக்கும் பொருட்டு அருள் வழங்குவதற்காக தன் உண்மை நிலையில் கீழிறங்கி வருதல்.
- ஐந்தொழில்களும் - திருமேனிகளும்
- முத்திருமேனிகளும் - நவந்தருபேதங்களும்

**(05 புள்ளிகள்)**

**இ) இறைவனும் ஆன்மாவும்**

- பதியாகிய இறைவன் பசுவாகிய ஆன்மாக்களுடைய பாசக்கட்டுக்களிலிருந்து விடுவித்தற் பொருட்டு தனிப்பெருங் கருணையினால் சொரூப நிலையிலிருந்து தடத்த நிலைக்கு இறங்கி வந்து ஐந்தொழில்களையும் ஆற்றுகின்றான்.
- மூவகை ஆன்மாக்களும் இறையருட் செயற்பாடுகளும்.
- இறை துணையுடனேயே ஆன்மாக்கள் உலகியல் வாழ்வினையும், மேலான இன்பத்தையும் பெறமுடியும்.
- " அவையே தானே ஆயிரு வினையின் ..." (சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரம்)
- இறைவன் குருவடிவாகி வந்து வீட்டின்பத்துக்கு வழிப்படுத்தல்.
  "குருவருளின்றித் திருவருளில்லை..."

**(05 புள்ளிகள்)**

**ஈ) ஆன்மவிடுதலையும் இறையருளும்**

- மூவகை ஆன்மாக்களின் சிறுவிளக்கம்.
- மூவகை ஆன்மாக்களும் திருவருளின் அருளிப்பாடுகளும்.
- சகலர் – குருவடிவில் எழுந்தருளி தீட்சை செய்து அருள்புரிவர்.
- ஆன்ம விடுதலைக்கான வழிகள்
  சைவ நாற்பாதம்
  குருலிங்க சங்கம வழிபாடுகள்
  தீட்சை முறைகள்
  திருக்கோயில் வழிபாடுகள்
- மலபரிபாகம், இருவினையொப்பு, சத்திநிபாதநிலை.

**(05 புள்ளிகள்)**

**6. இந்துக்களின் வாழ்வினை விரதங்கள் வளம்படுத்துமாற்றை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.**

**அ) விரதம் என்பதன் பொருள்**

**ஆ) விரத நியமங்கள்**

**இ) கந்தசஷ்டி விரதம்**

**ஈ) விரதத்தின் பலாபலன்கள்**

**(05 X 4 = 20 புள்ளிகள்)**

**அ) விரதம் என்பதன் பொருள்**

- விரதங்கள் என்பவை இறைவனின் திருவருளைப் பெறுவதற்கான வழிகள் எனக் கூறப்படுகின்றன.
- மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு காயம் ஆகிய திரிகரணங்களாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடல் விரதம் – நாவலர்.
- விரத: சங்கல்ப பூர்வ: புண்ய கரும: – சங்கல்ப பூர்வமாகச் செய்யப்படும் புண்ணிய கர்மமே விரதம் என சைவக்கிரியைகள் பற்றிக் கூறும் ஆகமங்களும் பத்ததிகளும் குறிப்பிடுகின்றன.

**(05 புள்ளிகள்)**

**ஆ) விரத நியமங்கள்**

- இயம நியமங்களுடன் இணைந்த ஒழுக்கச் செயற்பாடு விரதத்தின் பாற்படும்.
- மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் நன்னெறிப்படுத்தலே விரத நியமங்களாகும்.
- விரத நியமங்களாக சங்கல்பம் செய்தல் - குறிப்பிட்ட விரதத்தை ஒழுங்கு முறையில் செய்வதற்கான பிரதிக்ஞை எடுத்தல். (சத்தியம்)
- விரத தினத்துக்கு முதல் நாள் ஒரு பொழுதுண்ணுதல்.
- விரத தினத்தன்று உபவாசம் இருத்தல்.
- வைகறையில் நித்திரை விட்டெழுதல், நீராடி தோய்த்துலர்ந்த ஆடை அணிதல், ஆலய தரிசனம், திருமுறைப் பாராயணம், செபம் முதலானவற்றைச் சிறப்பாக அனுட்டித்தல்.

**(05 புள்ளிகள்)**

**இ) கந்தசஷ்டி விரதம்**

- முருகனுக்குரிய சிறப்பான விரதம்.
- ஐப்பசிமாத (தீபாவளி) அமாவாசையை அடுத்துவரும் பிரதமை தொடக்கம் சஷ்டி ஈறாக முருகனை நோக்கி அனுட்டிக்கப்படுவது.
- அறியாமை என்னும் அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற பரம்பொருளின் பேர-ருளைப் பெறும் வகையில் அனுட்டிக்கும் விரதம்.
- வல்வினை நீங்கி வரும்வினை போக்கி செல்வமும் செல்வாக்கும் தந்து அறிவுபெருக்கும் விதமாக அமைவது.
- இவ்விரதத்தின் மிகச்சிறப்பான அம்சம் உபவாசமாகும்.
- இவ்விரதம் முருகன் ஆலயப் பூசை வழிபாடுகள் மூலம் முருகனோடு ஒன்றிக்கச் செய்வது.
- இக்காலத்தில் கந்தபுராணம் படிப்பதும், பயன் கூறுவதும், கந்தசஷ்டி கவசம் படிப்பதும் சிறப்பான வழிபாடாகும்.
- இவ்விரத காலத்தில் சூரன்போர் நிகழும்.

**(05 புள்ளிகள்)**

**ஈ) விரதத்தின் பலாபலன்கள்**

- மனத்தூய்மை பெறுதல்.
- உடற்சுகாதாரம் மேன்மையடைதல்.
- விழுமியப் பண்புகளான ஜீவகாருண்யம், அன்பு, பொறுமை, பணிவு, கடமை, பகிர்ந்துண்ணல், சகோதரத்துவம் என்பன வளர்க்கப்படுதல்.
- இறையருளுக்குப் பாத்திரமாதல்
- விரும்பிய வரங்கள் கிடைத்தல்.
- வீட்டின்பம் சித்தித்தல்.

**(05 புள்ளிகள்)**

**7. இந்து சமய வரலாற்றில் மேல்வரும் சித்தர்கள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.**

**(அ) திருமூலர்**

**(ஆ) சிவயோக சுவாமிகள்**

**(10x 2 = 20 புள்ளிகள்)**

**(அ) திருமூலர்**

◆ திருமூலரின் மரபும் புலமையும் குறிப்பிடப்படல் வேண்டும்

- இவர் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கும் 6 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றார்.
- திருக்கைலாச மரபில் வந்தவர். இம்மரபினை சிவமரபு, நந்திமரபு, நாதன் மரபு என அழைப்பர்.
- திருநந்திதேவரிடம் சிவாகமங்களைக் கற்றுணர்ந்தவர்.
- இளமைத் திருநாமத்தை சுந்தரநாதன் எனக் கொண்டவர். இடையன் மூலனின் இறந்த உடலுள் கூடுவிட்டுப் புகுந்து திருமூலராக விளங்கியவர்.
- திருவாவடுதுறையில் யோக நிஷ்டையில் ஆழ்ந்தவர்.

- தமிழ்நாட்டில் உதித்த சித்தர்களில் தலைமைச் சித்தராகக் கருதப்படுகிறார். சித்தர் பரம்பரையின் வித்து எனப் போற்றப்படுகிறார்.

- திருமூலரினால் எழுதப்பட்ட திருமந்திரம் பற்றிய அறிமுகம்.

- மூவாயிரம் பாடல்களாலான சைவத் திருநூல் திருமந்திரமாகும். அது பன்னிரு திருமுறைகளில் பத்தாந் திருமுறையாகவும் தமிழ் ஆகமமாகவும் சிறப்புப் பெறுவது.

- "தமிழ் ஆகமம்" - "சுந்தரனாகமச் சொல்"

- தமிழில் 9 ஆகமங்களை விரித்துத் தமிழ்படுத்திய நூல். இதன் உள்ளடக்கம்

  1. முதலாந் தந்திரம் - காரணாகமத்தின் சாரம்
  2. இரண்டாந் தந்திரம் - காமிகாகமத்தின் சாரம்
  3. மூன்றாந் தந்திரம் - வீராகமத்தின் சாரம்
  4. நான்காந் தந்திரம் - சிந்தியாகமத்தின் சாரம்
  5. ஐந்தாந் தந்திரம் - வாதுளாகமத்தின் சாரம்
  6. ஆறாந் தந்திரம் - வியாமளாகமத்தின் சாரம்
  7. ஏழாந் தந்திரம் - காலோத்தராகமத்தின் சாரம்
  8. எட்டாந் தந்திரம் - சுப்பிராபேதாகமத்தின் சாரம்
  9. ஒன்பதாந் தந்திரம் - மகுடாகமத்தின் சாரம்

◆ திருமூலர் இந்து சமூகத்திற்கு கூறிய உன்னத விடயங்கள் திருமந்திரத்தில் உள்ளன.

- ஒழுக்கத்தை வலியுறுத்திக் கூறும் நூல் திருமந்திரம். அனுபவ ஞானத்தின் திருநூல்.

- சமயம், தத்துவம், அறிவியல் ஆகியவற்றை ஒருங்கே தரும் கலைக்களஞ்சியம்.

- அது யோக சாதனை நூல். மந்திர சாத்திரம், தந்திர சாத்திரம் எனப் போற்றப்படும்.

- தர்மசாத்திரமாகவும் விளங்கும் சிறப்பு உடையது.

- சம காலத்தில் தமிழகத்தில் நிலவிய பல்வேறு சைவப் பிரிவுகளைப் பதிவு செய்து கொண்ட ஒரு ஆவண நூலாக விளங்குவது.

- சைவத்தின் முடிந்த முடிபான சித்தாந்தக் கொள்கை பற்றி முதன் முதலில் குறிப்பிட்ட திருநூல் - "தற்பரம் கண்டுளோர் சைவசித்தாந்தரே" என்று இந்நூல் கூறுகிறது.

- சைவ தத்துவத்தின் முதன் நூல்களைத் தெளிவாக அடையாளங் காட்டிய சிறப்பு.

- அண்டவியல், வானியல், கணிதவியல் உள்ளிட்ட இந்துக்களின் பௌதிக அறிவியல் பற்றிய குறிப்புகள் செறிந்துள்ளன.

- உயிர்வர்க்கங்களின் தோற்றம், நோய்கள், சிகிச்சை உள்ளிட்ட உயிரியல், மருத்துவ சிந்தனைகளைக் கொண்ட சிறப்பு நூல்.

- வடமொழி சாஸ்திர மரபுக்கும் தமிழ்ப்புலமை மரபிற்கும் இடையே ஒரு தொடரோட்டத்தை இனங்காட்டியமை.

- தோத்திரமாகவும், சாஸ்திரமாகவும் அமைவது.

**(10 புள்ளிகள்)**

**(ஆ) சிவயோக சுவாமிகள்**

- யோகர் சுவாமிகள் பற்றிய அறிமுகம்.

- அவரது சைவத் தொண்டிற்கு தூண்டுகோலாக அமைந்தவை.

- யோகர்சுவாமிகள் சித்தமரபில் வந்தபோதும் இவர் சித்தராக மட்டுமன்றி, பக்தராகவும் சிவதொண்டனாகவும் மக்களோடு மக்களாக வாழ்ந்து சிவதொண்டினை அமைதியாக ஆற்றியவர்.

- யோகர்சுவாமிகள் வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, திருமுறைகள், ஔவையார் பாடல்கள், திருக்குர்ஆன், விவிலிய வசனங்கள் போன்ற பலநூல்களைக் கற்றார்.

- தனது குருவான செல்லப்பா சுவாமிகளிடம் நேரடியாகப் பெற்ற அநுபவங்கள் மற்றும் விவேகானந்தரின் சொற்பொழிவுகள் என்பவற்றை பற்றிக் குறிப்பிடப்படல்

- இவர் கற்ற ஆசிரியர்கள், இவர் வாசித்தறிந்த நூல்கள் என்பனவும் இவர் வாழ்ந்த சூழலும் இவரது தொண்டிற்கு தூண்டுகோலாக அமைந்தன.

- இவர் ஆற்றிய தொண்டுகள்.

- சிவதொண்டன் நிறுவனம்.

- சிவதொண்டில் முதற்படி - குருபரனைப் போற்றி வணங்குதல்.

- குரு - சீடன் முறைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார்.

- சமய ரீதியான சிவதொண்டுகள்
    1. சிவதொண்டன் நிலையங்களை உருவாக்கியமை
    2. திருமுறை வகுப்புக்கள்
    3. புராணபடனம்
    4. சித்தாந்த சாத்திரங்களைக் கற்றல்
    5. கோயில் தொண்டுகள்
    6. பாதயாத்திரைகளை மேற்கொண்டமை
    7. தியானப் பயிற்சிகள்

- சமூக ரீதியான சிவதொண்டுகள்
    1. சீரியவாழ்க்கை முறை
    2. வாழ்க்கையில் தியானம் செய்தல்
    3. கடமையே வழிபாடு
    4. ஒருவரைப்பற்றி குறை கூற எமக்கு உரிமையில்லை
    5. நோய் தீர்த்தல்
    6. மழை பெய்வித்தமை
    7. மதுவிலக்கு
    8. விவசாய விருத்தி
    9. சிவதொண்டாக மொழிபெயர்ப்புப் பணிகள்
    10. இனம், சாதி, சமயம் பாராது சிவதொண்டு

- அவரது சமயத்தோடு இணைந்த வாழ்வியல் முறைகள்.

- யோகர் சுவாமிகள் 'தெய்வத்தை மனிதரிடத்தில் காண்' என்கிறார்.

- யோகர்சுவாமிகளின் கருத்துக்கள் மக்களுக்கு சென்றடைய வேண்டும் - சென்றடையாதிருப்பது தான் பிரச்சனை. இன்றைய உலகத்திலே நாம் போட்டி, பொறாமை, பழிக்குப்பழி எங்கும் எதிர்பார்ப்பு, எதிலும் எதிர்பார்ப்பு, ஒருவர் ஓர் உதவியைச் செய்து விட்டு இன்னோர் சந்தர்ப்பத்தில் தனக்கு உதவி செய்ய வேண்டும்'என எதிர்பார்ப்பர். அவ்வாறு செய்யவில்லையென்றால் பொறாமை, வஞ்சகம், சில-வேளை அவரது தொடர்பையே துண்டிப்பர் அல்லது தூற்றுவார். இவ்வாறான உலகத்திற்கு அரிய பொக்கிஷங்களை யோகர் சுவாமிகள் விட்டுச் சென்றிருக்கிறார்.

- நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பயன் உண்டு . நியூட்டனின் விதியும் அதைத்தான் சொல்கிறது. அதைத்தான் சுவாமிகளும் சிவதொண்டாய் செய்யும் போது கடவுள் உனக்குத் துணையாக இருப்பார் என்று கூறுகின்றார்.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 20)**

8. இந்து அறிவியல் மரபில் மேல்வருவனவற்றின் வகிபங்கினை விளக்குக.

(அ) பஞ்சாங்கம்

- பஞ்சாங்கத்தின் உறுப்புக்களை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குதல் வேண்டும்.

- வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் எனும் ஐந்து முக்கிய உறுப்புக்களை உடையது பஞ்சாங்கம். (பஞ்ச + அங்கம்)

  1. கிழமை : 7 வாரம் - இரவி வாரம், சோம வாரம், மங்கள வாரம், புதன் வாரம், பிருகஸ்பதி வாரம், சுக்கிர வாரம், சனி வாரம்.

  2. திதி : இது சூரியன் நிற்கும் இடத்திலிருந்து சந்திரன் நிற்கும் தூரத்தை குறித்து நிற்கும். பிரதமை முதல் பூரணை வரை - சுக்கில பட்சம். பிரதமை முதல் அமாவாசை வரை கிருஷ்ண பட்சம்.

  3. நட்சத்திரம் : அச்சுவினி முதல் ரேவதி ஈறாக 27 ஆகும்.

  4. யோகம் : இது நட்சத்திரங்களைக் கொண்டு கணிக்கப்படும்.

  5. கரணம் : 30 திதிகளுக்கும் 60 கரணங்களைக் குறிப்பிடுவர்.

- பஞ்சாங்கத்திற்கும் அறிவியலுக்கும் இடையிலான தொடர்புகளை வரலாற்றடிப்படையில் குறிப்பிடல்

- முதல் பஞ்சாங்கம் குப்தப் பேரரசு காலத்தில், ஆரியப்பட்டரால் வான சாஸ்திர ஆய்வின்படி கோள்களின் நிலை கண்டறிந்து கணிக்கப்பட்டது

- இவருக்குப் பின் வராகமிகிரர் என்பவர் பஞ்சாங்க விடயங்களைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்து சோதிடக் கலைக்கு மிகுந்த பங்களிப்பை நல்கினார்.

- இன்று மூன்று விதமான பஞ்சாங்கங்கள் காணப்படுகின்றன என்பர்.

  1. வாக்கிய பஞ்சாங்கம்
  2. சித்தாந்த பஞ்சாங்கம்
  3. திருக்கணித பஞ்சாங்கம் ஆகியவை

- பஞ்சாங்கத்தில் தேதிகள் சூரியனுக்குரிய நாட்களை அன்றி திதிகளை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்பட்டன.

- முப்பது திதிகள் சந்திர மாதமாகும். இது 29 1/2 சூரிய நாட்களாகும்.

- ஒவ்வொரு மாதமும் பதினைந்து திதிகளைக் கொண்ட இரு பட்சங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
  - அமாவாசையுடன் தொடங்கும் பட்சம் - சுக்கில பட்சம்
  - பௌர்ணமியுடன் தொடங்கும் பட்சம் - கிருக்ஷ்ண பட்சம்

- ஆரம்பத்தில் வட இந்தியாவிலும் தக்கணத்திலும் மாதங்கள் பௌர்ணமியிலே தொடங்கின.

- ஆனால் தமிழ் நாட்டில் பொதுவாக அமாவாசையிலே மாதந் தொடங்கியது. இம் முறையிலான பஞ்சாங்கமே இந்து சமய நோக்கங்களுக்காக இந்தியா எங்கும் இன்றுவரையும் பயன்படுத்தப்படுகிறது.

- சூரியநாளின் எந்நேரத்திலும் திதி தொடங்கலாம். ஆனால் சூரியன் உதயமாகும் பொழுது எத்திதி உள-தோ அத்திதியே அன்று முழுவதும் இருக்குமெனக் கொள்ளப்பட்டது.

- சந்திர மாதங்கள் சித்திரையிற் தொடங்கின. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, காரத்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பன அவையாகும்.

- இந்திய ஆண்டின் ஆறு பருவங்களாவன:
    1. வசந்தம் (இளவேனில் - மார்ச் - மே)
    2. கிரீட்மம் (முதுவேனில் - மே - யூலை)
    3. வருஷ (மழைக்காலம் - யூலை - செப்டம்பர்)
    4. சரத் (இலையுதிர்காலம்- செப்டம்பர் - நவம்பர்)
    5. ஹேமந்தம் (மாரி காலம் - நவம்பர் - சனவரி)
    6. சிசிரம் (கூதிர் காலம் - சனவரி - மார்ச்)

- பிரபவ முதல் அசட்ஷய வரை வருஷங்கள் 60 ஆகும்.

- பன்னிரு சந்திர மாதங்களில் 354 நாட்களே உண்டு. இது சூரிய ஆண்டுக்கும் சந்திர ஆண்டுக்கும் உள்ள முரண்பாடு. அறுபத்தியிரண்டு சந்திர மாதங்கள் அறுபது சூரிய மாதங்களுக்குச் சமமென இம்முரண்பாட்டைத் தீர்த்தனர்.

- இந்துப் பஞ்சாங்கத்தின் தேதிகள் மாதம், பட்சம், திதி என்ற வரிசைக் கிரமத்தில் தரப்படும்.

- இந்துப் பஞ்சாங்கம் மிகத் திறமையாக யாக்கப்பட்டதென்பர். எனினும் ஓரளவு சிக்கலான தன்மையும் உள்ளது.

- குப்தர் காலம் முதலே, மேலை நாட்டு வானியலாளர் தந்த சூரிய பஞ்சாங்கத்தை மக்கள் அறிந்திருந்தபோதிலும், அண்மைக்காலம் வரை அவர்கள் பழைய சந்திர சூரிய பஞ்சாங்கத்தையே பயன்படுத்தினர்.

**(10 புள்ளிகள்)**

**ஆ. வேதங்களில் மருத்துவம்**

- ◆ இந்துக்களின் மருத்துவச் சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைவது வேதம் என்பதை எடுத்துக்காட்டல்.

- ◆ இருக்கு, யசுர் ஆகிய வேதங்களில் காணப்படும் மருத்துவச் சிந்தனைகள் குறிப்பிடப்படல்.

- நோயை அறிதலும் நோய் மூலத்தை அறிதலும் நோயைத் தணித்தலும் நீக்கலும் தடுத்தலும் அது பற்றி ஆய்தலும் மருத்துவத்தின் பாற்படும்.
இந்துக்களின் மருத்துவக்கலை அறிவு இருக்கு வேதத்திலிருந்து ஆரம்பமாகின்றது.
(உ - ம்) - இருக்கு வேதத்தில் உள்ள ஔஷதி சூக்தம்; - வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் 'திரி-தாது' எனக் குறிப்பிடுகிறது.
- கண், செவி சார்ந்த குறைபாடுகளை நீக்கும் தேவ மருத்துவர்களாக அஸ்வினி குமாரர்கள் போற்றப்பட்டனர்.

- சுக்கில யசுர் வேதத்தில் குஷ்டம், இதயநோய், காசநோய், சித்த சுவாதீனம் போன்ற பிணிகளுக்கான குணங்கள், அறிகுறிகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. இந்த நோய்களைத் தீர்க்கும் மருந்தாக மந்திர உச்சாடனங்களே பயன்படுத்தப்பட்டன.

- ◆ இந்துக்களின் மருத்துவச் சிந்தனைகளில் அதர்வண வேதம் முக்கிய இடம் பெறுகின்றமை.

- அதர்வண வேதத்தில் வரும் பேஷ்ஜானி சூக்தம், ஆயுஷ்யானி சூக்தம் ஆகியவற்றில் மருத்துவ சிந்தனைகள் அதிகமாக உள்ளன.

- சூரியனின் அகஞ் சிவப்புக் கதிர்களுக்கு மஞ்சட் காமாலை நோயைக்குணப் படுத்தும் சக்தி (ஆற்றல்) உண்டென்பதை அதர்வண வேதம் அன்றே குறிப்பிட்டுள்ளது.
(உ-ம்) 'இவன் நோய் நீங்கி மஞ்சளாகாமலிருக்க - காமாலையும் நீங்குக;

- கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய அதர்வண வேதத்தின் 2ஆம் காண்டம் - 66 ஆம், 67 ஆம் சூக்தங்களில், 'கிருமிநாசம்; என்ற பகுதியில் நோய்க் கிருமிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

- அதர்வண வேதத்தில், மனித உடற் கூற்றியல், குருதிச் சுற்றோட்டம் என்பன தொடர்பான துல்லியமான சில சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன.
(உ-ம்)நாடிகளில் பாய்கின்ற சிவப்பு நிறமான குருதி, 'அருணா; எனவும்,
நாளங்கள் தாங்கி வரும் கரும் சிவப்புக் குருதியை 'லோஹினி எனவும் அழைத்தனர்.

- அதர்வண வேதத்தில் பல்வகை ஔடதங்கள் பற்றிய கருத்துக்கள் உள்ளன.
(உ-ம்) - குஷ்ட ரோகத்தை நிவர்த்தி செய்யும் இரஜனீ என்ற மருந்து.
கபால வியாதிகளைச் சீர்செய்யவல்ல கர்ண சூலம் என்ற மருந்து.
விஷ் முறிவை ஏற்படுத்தும் அபஸ்கம்பம் என்னும் மூலிகையானது,
வெண்குஷ்டததைப் போக்கும் சக்தி வாய்ந்தது.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 20)**